கிறித்துவ மத நிறுவனங்கள்.

*837 விஞ—திரு. என். கிட்டப்பா, புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க தனியே ஒரு கிறித்துவ அறநிலையத்துறை அமைக்கப்பட்டிருக்கின்றதா?

(இ) இல்லையெனில், அந்த ஸ்தாபனங்களின் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் எப்படிக் கண்காணிக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) கிறித்துவ மத ஸ்தாபனங்கள், மாதா கோயில்கள் ஆகியவற்றினைக் கண்காணிக்க ஒரு கிறித்துவ அறநிலையத் துறை அமைக்கப்படவில்லை.

(இ) கிறித்துவ தேவ ஆலயங்களின் சொத்துக்கள், அந்தந்த பகுதியில் உள்ள கிறித்துவ பாதிரிகளால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1972-73-ம் ஆண்டுக்கான அவையுரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) தமிழ்நாடு சட்டப் பேரவையின் பதினன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட பதினன்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. ஏ. சுப்பிரமணியம்.
2. டாக்டர் எச். வி. ஹாண்டே.
3. திரு. கே. கந்தசாமி.
4. திரு. சோ. அழகர்சாமி.
5. திரு. கே. பி. கோபால்.
6. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

(பேரவைத் தலைவர்)

7. திரு. ரா. ரா. முனுசாமி.

8. திரு. ஏ. எம். இராஜா.

9. திரு. கு. பாலகிருட்டினன்.

10. திரு. ச. மு. பழனியப்பன்.

11. திரு. நா. நாச்சிமுத்து.

12. திரு. க. மு. கதிரவன்.

13. திரு. ஜே. எஸ். இராசு.

14. திரு. எம். ஏ. லத்திப்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1972-73-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும், தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப் பேரவையின் 183 (4) விதியின்கீழ் பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(ஆ) அவையினர் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1972-73-ம் ஆண்டுக்கான அவையினர் குழுவிற்கு (House Committee) சட்டப் பேரவையின் பதின்மூன்று உறுப் பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதின்மூன்று உறுப் பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் :—

1. திரு. எஸ். அழகுத்தேவர்.

2. திரு. த. சோனையா.

3. திருமதி வி. ப. பழனியம்மாள்.

4. திரு. தொ. ப. சீனிவாசன்.